PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
வி.டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 26 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 137

பிரதமர் தலைமையில் 55- வது பிரகதி கூட்டம்



சென்னை – 26 நவம்பர், 2026

செயல்திறன் வாய்ந்த ஆளுகை, குறித்த நேரத்தில் திட்டங்களைச் செயல்படுத்துவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட, தகவல் தொழில்நுட்பத்தால் இயங்கும் பன்முனைத் தளமான ' பிரகதி ' யின் 55- வது கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது, சாலை, மின்சாரம், நிலக்கரி, ரயில்வே ஆகிய துறைகளில், மொத்தம் சுமார் ரூ. 78,000 கோடி மதிப்பிலான ஐந்து முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களை பிரதமர் ஆய்வு செய்தார். மேலும், பிரதமரின் சேது திட்டத்தைச் செயல்படுத்துவது உட்பட, தொழிற்பயிற்சி நிறுவனங்களின் (ஐடிஐ) சூழலமைப்பையும் அவர் ஆய்வு செய்தார்.

சாலைத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன், செலவிடப்படும் தொகையை விட அதன் பலன்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். நிலக்கரித் திட்டத்தைச் சரியான நேரத்தில் செயல்படுத்துவதுடன், மறுவாழ்வு, மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

பரவலாக்கப்பட்ட சூரியசக்தி, காற்றாலை மின் திட்டங்களுக்கான புதிய, ஆக்கபூர்வமான மாதிரிகளை ஆராயுமாறு பிரதமர் யோசனை தெரிவித்தார். உள்ளூர் வளங்களின் இருப்பையும் தேவையையும் கருத்தில் கொண்டு, மின் நுகர்வு மையங்களுக்கு அருகிலேயே இத்தகைய திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.